அக்டோபர்: 28

## கோமேர்

### வாசிக்க: ஓசியா 1: 3-11

இஸ்ரவேல் தேசத்தை இரண்டு யெரொபெயாம்கள் ஆட்சி செய்தார்கள். அதில் சாலொமோன் இறந்த பிற்பாடு இஸ்ரவேலை இரண்டாக பிரித்து வடக்கை ஆட்சி செய்தவர் முதலாவது யெரொபெயாம். ஓசியா காலத்தில் இஸ்ரவேலை ஆண்ட யெரொபெயாம் யோவகாசின் மகனாகும். இவர் ஆட்சியில் விக்கிரக ஆராதனை நிறைந்த பாவ வழியில் மன்னனும், மக்களும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களை மனந்திரும்ப வைக்கவே ஓசியாவை உபயோகப்படுத்தினார். கோமேர் என்ற விபச்சாரியை திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுக்கு தகப்பனாகிறார் ஓசியா. யெஸ்ரயேல், லோருகாமா, லோகம்மீ என்ற பெயர்களை அப்பிள்ளைகளுக்கு வைக்கும்படி கர்த்தர் சொல்லி அதன் அர்த்தத்தையும் சொல்லுகிறார். லோகம்மீ என்பதன் அர்த்தம் நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை என்று கூறுகிறார். அவ்வாறு சொல்லிவிட்டு அடுத்த வசனத்தில் நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும். கர்த்தரின் மகா இரக்கத்தை இவ்வசனம் வெளிப்படுத்தி நிற்கிறது. மனந்திரும்பி வந்தால் உங்களை நான் ஏற்றுக்கொள்ளுவேன் என்பதே இதன் பொருள்.

### கேள்வி:

பரிசுத்தமாக வாழ்ந்த ஓசியாவை எதற்காக கோமேரை திருமணம் செய்யச் சொன்னார்?

### பதில்:

பரிசுத்தமான தேவன் பாவிகளான எங்களை நேசிப்பதற்கு ஒப்பானது தான் ஓசியாவின் மணவாழ்க்கை. ஓசியா 2:5 அவர்களுடைய தாய் சோரம்போனாள், அவர்களைக் கர்ப்பந்தரித்தவள் இலச்சையான காரியங்களைச் செய்தாள்; அப்பத்தையும், தண்ணீரையும், ஆட்டுமயிரையும், பஞ்சையும், எண்ணெயையும், பானங்களையும் கொடுத்துவருகிற என் நேசர்களைப் பின்பற்றிப் போவேன் என்றாள். ஓசியாவை விட்டுவிட்டு கோமேர் தனது பழைய நேசர்களை தேடிப் போய் விட்டாள். ஓசியாவோடு மூன்று பிள்ளைகள் பிறக்கும்வரை இருந்த கோமேர். பல ஆண்டுகளின் பின் பாவவாழ்க்கைக்குள் பிரவேசித்தாள். இது போன்று தான் நாமும் பிள்ளைகளே பல வருடங்களாக உண்மை பேசினோம் இப்போது பொய் பேசுகிறோம். பல வருடங்களாக கோபப்படவில்லை இப்போது எரிச்சல்படுகிறோம், பொறாமைகொள்ளுகிறோம். இப்படி பல காரியங்கள் நம்மத்தியில் இருக்கிறாது. இவற்றை ஆவிக்குரிய விபச்சாரம் என்று சொல்லுவார்கள். ஆரம்பத்தில் எவ்வாறு கர்த்தரை நேசித்தோமோ அல்லது பரிசுத்தமாய் வாழ்ந்தோமோ. இறுதிவரை அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறக்கூடாது. அதை விட முக்கியமானது ஆரம்ப நாட்களில் இருந்த விசுவாசம், பரிசுத்தம், தேவனை தேடும் அளவு நாளடைவில் படிப்படியாக அதிகரிக்க வேண்டும். அநுதினமும் வேதத்தை வாசித்து ஜெபித்து இயேசப்பாவை பார்த்து அவரை நோக்கி ஓடவேண்டும்.

ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. **வெளி 2:4**

ஜெபம்

மகா பரிசுத்தமுள்ள தகப்பனே! நாங்கள் பல தடவை உங்களை துக்கப்படுத்தி விட்டோம். எங்களை மன்னியுங்கப்பா. தொடர்ந்து விசுவாசத்தில் அன்பில் பரிசுத்தத்தில் நிலைத்திருக்க உதவி செய்திடுங்கப்பா. ஆமென்